பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 29 வெள்ளிக்கிழமை 013.01.2023 கதிர் 319

## பொங்கல் விடுமுறையிலும் அமுலாகின்றது மின்வெட்டு

எதிர்வரும் மூன்று நாட்களுக்கு மின்வெட்டு எவ்வாறு அமுல்படுத்தப்படும் என்பது தொடர்பான அறிவிப்பை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

சனி, ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் 2 மணி நேரம் 20 நிமிடங்கள் மின்சாரம் தடைப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

அதன்படி, மதியம் 8

## முன்னாள் வடக்கு ஆளுநர் றெஜினோல்ட் காலமானார்



வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் முன்னாள் அமைச்சருமான றெஜினோல்ட் குரே தனது 75 ஆவது வயதில் காலமானார்.

களுத்துறை - வாத்துவையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்றிரவு நடைபெற்ற உள்ளூராட்சி 2

## கோட்டாவிடம் வாக்குமூலம் பெறுமாறு கோட்டை நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம், பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டது.

கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஆர்ப்பாட்டக்காரர்களால், கண்டுபிடிக்கப்பட்டு கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு கோடியே 70 இலட்சம் ரூபா பணம் தொடர்பில் அவரிடம் வாக்குமூலம் பெறுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது தொடர்பான வழக்கு 2



# புதிய கூட்டுக்கான முயற்சி; விக்கி, மணி வெளியேறினர்

### ஆரம்பத்திலேயே ஐக்கியம் 'அவுட்'

(ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஓரம் கட்டி, ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டை உருவாக்கும் முயற்சியில் உடன்பாடு இன்றி தமிழ் மக்கள் கூட்டணி வெளியேறியது. அக்கட்சியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும், அவரது கட்சியில் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் இணைந்த யாழ் முன்னாள் மேயர் மணிவண்ணனும் இதுதொடர்பான கூட்டத்திலிருந்து வெளியேறினர். 2



## புதிய கூட்டணி அறிவிப்பு



ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசிய கட்சி, மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன இணைந்து புதிய கூட்டணியை அறிவித்தன.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே கட்சிகளின் தலைவர்களால் புதிய கூட்டணி அறிவிக்கப்பட்டது

புதிய கூட்டணி அமைப்பது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் 8

## திட்டமிட்ட வகையில் உள்ளூராட்சித் தேர்தல்

### உயர்நீதிமன்றத்துக்கு ஆணைக்குழு அறிவிப்பு

திட்டமிட்ட வகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு இன்று உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்தது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்பு நடத்தும் தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு எதிராக - தேர்தல் ஏற்பாடுகளை இரத்துச் செய்யுமாறு உத்தரவிடுமாறு கோரி ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் 8

## சங்கரியின் கட்சி தனித்துப் போட்டி



தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழர் தாயகப் பிரதேசத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் தனித்துப் போட்டியிடவுள்ளது. எம்மோடு இணைந்து செயற்பட்ட அனைவரும் மீண்டும் வர வேண்டும். 2

### சங்கரியிடம் தீர்வுத் திட்டம் உண்டாம் சரியான நேரத்தில் வெளியே வருமாம்

எம்மிடம் தீர்வு திட்டம் உள்ளது. அதனைச் சரியான நேரத்தில் மக்களுக்குத் தெரிவிப்போம் - என்று தமிழர் விடுதலைக்கூட்டணி தெரிவித்துள்ளது. தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி 2

## ரயிலுடன் மோதி 3 யானைகள் பலி

ஹபரணையில் ரயிலில் மோதி மூன்று காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என்று ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு - திருகோணமலை - கொழும்பு ரயில் பாதையில் ஹபரணை மற்றும் கல் ஓயா நிலையங்களுக்கு இடையில் ஹடரெஸ் கொடுவ பிரதேசத்துக்கு அருகில் அதிவேகமாகப் பயணித்த ரயிலில் மாதுண்டு மூன்று யானைகள் உயிரிழந்துள்ளன என்று 8



### கொலை செய்து புதைக்கப்பட்ட

## இரு முஸ்லிம் இளைஞர்களினதும் உடற்பாகங்கள் தோண்டியெடுப்பு

ரம்புக்கனையில் ஐஸ் போதைப்பொருள் தகராறில் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட இரண்டு இளைஞர்களின் உடல் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கேகாலை நீதிவானின் உத்தரவையடுத்து, புதைக்கப்பட்ட உடற்பாகங்களை அகழும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மாவனல்லைபிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய மொஹமட் அன்வர் மொஹமட் அர்ராத் மற்றும் மொஹமட் இக்பால் மொஹமட் அஸ்ஹர் ஆகிய இரு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

நவம்பர் 18 மற்றும் 25 ஆம் திகதிகளில் இருந்து 8

### 20 இலட்சம் ரூபா இலஞ்சம்:

## 'மொட்டு'க் கட்சியைச் சேர்ந்த தவிசாளர் ஒருவர் மாட்டினார்!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வசமுள்ள மாவனல்லை பிரதேச சபையின் தவிசாளர் சமந்த ஸ்டீபன் கைது செய்யப்பட்டுள்ளார்.

காணி ஒன்றுக்கு அனுமதி வழங்குவதற்காக 20 இலட்சம் ரூபாவை இலஞ்சமாகப் பெற முயற்சித்த குற்றச்சாட்டில் அவர் இலஞ்ச, ஊழல் விசாரணைக் ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது 2

## சங்கரியின்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்காக அனைவரையும் வரவேற்கின்றோம். – இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித் துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த கட்சியின் ஊடகப் பேச்சாளர் அருண் தம்பிமுத்து மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடியான காலத்திலே உள்ளூராட்சி சபைகளை ஒருமித்த கருத்தோடு சரியான முறையில் கொண்டு செல்ல வேண்டிய தேவையுள்ளது. எனவே, அனைவரையும் வரவேற்கின்றோம்.

உள்ளூராட்சி சபைகள் பல கட்சிகளைக் கொண்டு அமைந்தாலும் கூட மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டும். இது மாகாண சபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் அல்ல.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனியாகப் போட்டியிட்டாலும் அனைவருடனும் இணைந்து வேலை செய்வோம்.

பல சபைகளில் நாங்களே ஆட்சி அமைத்தாலும் கூட அனைவரையம் உள்வாங்கிஒருமித்துச்செயற்படுவதுவே நோக்கமாக இருக்கின்றது.

தமிழ்க் கட்சிகள் ஒன்றாகப் போட்டியிடப் போகின்றன, தனித்தனியாகப் போட்டியிடப் போகின்றன எல்லாம் அரசியலுக்காக ஒவ்வொரு கட்சிகளும் தமது முடிவுகளை எடுக்கின்னர். நாம் மற்ற கட்சிகளின் முடிவுகளைப் பற்றி சிந்திக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கென்று தெளிவான கருத்து இருக்கின்றது. தெளிவான கொள்கை இருக்கின்றது.

நாம் பல வருடங்களின் பின்னர் கட்சியை மீள்கட்டமைத்து முன்சென்று கொண்டிருக்கின்றோம். எனவே, ஏனைய கட்சிகளின் கூட்டணி இல்லாமல் நாம் தனித்துப் போட்டியிடுவோம் – என்றார்.

## சங்கரியிடம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த கட்சியின் ஊடகப் பேச்சாளர் அருண் தம்பிமுத்து மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ப தைத் தெளிவாகக் கூறி வந்திருக்கின்றோம். வட்டுக்கோட்டை பிரகடனத்தை உருவாக்கிய கட்சி தமிழர் விடுதலைக் கூட் டணி. சுதந்திரதினத்துக்கு முன் தீர்வைக் காணுவேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார். அதற்கு இன்னும் சில வாரங் களே உள்ளன.

தமிழ்க் கட்சிகளைப் பேச் சுக்கு ஜனாதிபதி அழைத்த போதும் தமிழர் விடுதலைக் கூட்டணியை அழைக்கவில்லை. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதிப்படுத்தும் கட்சிகளை மாத்திரமே ஜனாதிபதி அழைப்பதாகத் தெரிவித்திருந்தார்கள். ஆனால், தமிழர் பிரச்சினை அவ்வாறான விடயம் அல்ல.

கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளை விடுத்து பேச்சு நடத்துவோம் எனத் தெரிவித்தனர். அதனால் ஏற்படும் பயன் என்ன என்பதை மக்கள் அறிந்திருந்தனர். அதனாலேயே பல பேச்சு வார்த்தைகள் அக்காலத்தில் வெற்றி பெறவில்லை. அதைப்போல் பேச்சுக்கு நாம் சிலரை அழைக்கின்றோம்; நீங்கள் ஒன்றாக வாருங்கள் என்ற நாடகங்களை நடத்துவது அர்த்தமற்ற செயல்.

எம்மிடம் தீர்வுத் திட்டமும் உள்ளது. அது என்ன என்பதைச் சரியான வேளையில் மக்களுக்குத் தெரிவிப் போம். அத்துடன் இலங்கையில் உள்ள அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தவும் நாம் தயாராகவுள்ளோம் – என்றார்.

## கோட்டாவுடன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்த, ஆர்ப்பாட்டக்காரர்களால் இந்தப் பணத் தொகை கண்டுபிடிக்கப்பட்டது.

## புதிய கூட்டுக்கான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பரப்பில் செயல்படும் ஆறு கட்சிகள் ஒண்றினைந்து போட்டியிடும் முயற்சி தொடர்பில் இன்றும் யாழ் ரில்கோ விடுதியில் கூட்டம் இடம்பெற்றது.

கூட்டத்தில் தேர்தல் கூட்டிற்கான சின்னம் தொடர்பான பேச்சில் தமது கட்சியின் மான் சின்னத்திலிருந்து தமது கட்சி விலக முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் உறுதியாகத் தெரிவித்தார். பொதுச் சின்னமாக குத்துவிளக்கில் போட்டியிடலாம் என ஏனைய கட்சிகள் உறுதியாக தெரிவித்தமையால் சின்னத்தை மாற்றுவதாயின் எனது கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுடன் பேசாது பதிலளிக்க முடியாது எனத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியேறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியேறியதையடுத்து தற்போது விக்னேஸ்வரன் அணியில் இணைந்துள்ள முன்னாள் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனும் கூட்டத்தில் இருந்து வெளியேறினார். விக்கினேஸ்வரனின் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் சிவநாதனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

இதனையடுத்துத் தொடர்ந்து கூட்டத்தில் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கட்சியுடன் ஜனநாயகப் போராளிகள் கட்சியும் கூட்டத்தில் பங்கு கொண்டுள்ளபோதும் மேலும் ஒரு கட்சி பல விடயங்களில் உடன்பாடு இன்றியே கருத்துக்களை தெரிவிப்பதாக கூறப்பட்டது..

முன்னதாக, அந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்த விக்கினேஸ்வரன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகளின், ஜனநாயகப் போராளிகள் கட்சியை கூட்டமைப்பில் சேர்ப்பதை கண்டித்தமையுடன் அதனை ஏற்றுக்கொள்ளவும் மறுத்துவிட்டார்.

மிகஅண்மையில்பதிவுசெய்யப்பட்ட தனது தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சியின் மான் சின்னத்திலேயே தேர்தலில் போட்டியிடவேண்டும் என்றும் அல்லது உருவாக்கப்படும் கூட்டமைப்புக்குத்தன்னைப்பொதுச்செயலாளராக நியமிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார் எனவும், அதனை மற்றையவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்ததைத் தொடந்து அவர் கூட்டத்திலிருந்து வெளியேறினார் எனவும் தெரிகிறது.

கூட்டமைப்பில் தற்போது இடம் பெற்றுள்ள செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ, த.சித்தார்த்தன் தலைமையிலான புளொட் ஆகிய கட்சிகளுடன் சேர்ந்து இயங்குவது தொடர்பாக க.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ் தேசிய மக்கள் கட்சி, என்.சிறிகாந்தா தலைமையிலான தமிழ் தேசிய கட்சி, யாழ் மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையிலான அணி, ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன இந்தப் பேச்சில் கலந்து கொண்டிருந்தன.

## 'மெட்டு'......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளார். இதன்போது, அவரது சாரதியும் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## முன்னாள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தேர்தல் சம்பந்தமான சந்திப்பின் போது அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. அதையடுத்து, அவர் பாணந்துறை ஆதார வைத்திய சாலையில் சேர்க் கப்பட்டார். அதனைத் தொடர்ந்து, மேலதிக சிகிச்சைகளுக்காகக் களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி இன்று அதிகாலை அவர் உயிரிழந்தார் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தயக்கம் ஏனோ?

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்குத் தடை விதித்து, கனடா அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பை ஒட்டி, மஹிந்த ராஜபக்ஷவின் மகனும் பொதுஜன பெரமுனவின் எம்.பியும், முன்னாள் முன்னாள் அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ வெளியிட்ட ட்விட் செய்திக்கு சரியான பதிலடி கொடுத்திருக்கின்றார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் எம்.பி.

அவரின் பதிலடி ஒட்டுமொத்தத் தமிழரின் நிலைப்பாடு என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள், போராட்ட காலத்தில் சிறுவர் போராளிகளை இணைத்துக் கொண்டார் எனவும், அனைத்து இனங்களையும் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் அரச அதிகாரிகளை கண்மூடித்தனமாக கொன்றனர் எனவும் நாமல் ராஜபக்ஷ தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வருக்கு கனடா விதித்துள்ள தடை தொடர்பாகவே நாமல் ராஜபக்ஷ இந்தக் கருத்தை வெளியிட்டார்.

கனடாவிற்கு முடிவெடுப்பதற்கு இறையாண்மை உரிமை இருந்தாலும், ஒருதலைப் பட்சமாகவும் மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையிலும் தடை விதிக்கப்பட்டுள்ளமை கவலையளிப்பதாக நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கருத்துக்கு பதிலடி கொடுத்துள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் –

"உண்மைகள் தொடர்பில் கருத்திற்கொள்வதாக இருந்தால், இலங்கைத் தீவில் கடந்த 75 ஆண்டுகால குற்றங்களை ஆராயும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவுவதற்கு ஒப்புக்கொள்வது சிறந்த யோசனையாக அமையும்" –என நாமல் ராஜபக்ஷவிற்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

"தமிழ் மக்கள் இதனை எதிர்கொள்ளத் தயாராகவுள்ள போதிலும், ஏன் நீங்கள் தயராக இல்லை?"– எனவும் நாமல் ராஜபக்ஷவிடம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒருவரை ஒருவர் வெறுமனே குறை சொல்வதில் பயனில்லை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு போவோம், துணிச்சல் இருந்தால்– உங்கள் பக்கம் உண்மை, நீதி, நியாயம், தர்மம் இருந்தால் – வாருங்கள், அங்கு பேசுவோம் என்ற சாரப்பட கஜேந்திரகுமார் விடுத்திருக்கும் சவால் அவருடையது மட்டுமின்றி முழு தமிழினத்தினதும் நிலைப்பாடு தான்.

கனடா முடிவை மறைமுக நிகழ்ச்சி நிரல் எனக் குறிப்பிடும் நாமல் ராஜபக்ஷவும், அவரின் சிங்கள தரப்பு அரசுகளும், சர்வதேச நீதி விசாரணை ஆயத்துக்கு வர மறுப்பது எந்த நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டது?

# மக்களை முழுமையாக அழிக்கும் வகையில் அரசின் செயல்பாடுகள்!

## முருந்தெட்டுவே ஆனந்த தேரர் காட்டம்



தவறான ஆலோசனைகளுக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டால் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நேர்ந்த கதியே அவருக்கும் ஏற்படும்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை முழுமையாக அழிக்கும் வகையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் காணப்படுகின்றன என அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார். நாரஹேன்பிடியவில் உள்ள அபயராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

முறைமை மாற்றத்தின் ஊடாக அரச நிர்வாகத்தை முன்னெடுக்க முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இருப்பினும் அவரை சூழ்ந்திருந்த தரப்பினர் அவரைத் தவறாக வழிநடத்தி முழு நாட்டுக்கும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தினார்கள்.

நாடு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடியை எதிர் கொண்ட போது எவரும் அரசாங்கத்தைப் பொறுப்பேற்க முன்வரவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து சவால்களையும் ஏற்று பொறுப்பேற்றார். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

தவறான ஆலோசனைகளுக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நேர்ந்த கதியே அவருக்கும் நேரிடும் என்பதில் எந்த மாற்றமும் கிடையாது.

அரசாங்கத்தின் ஒருசில தீர்மானங்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை முழுமையாக அழிக்கும் வகையில் காணப்படுகின்றன. நெருக்கடியான சூழ்நிலையில் அரச செலவுகளைக் குறைத்து மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அரசாங்கம் செயற்பட வேண்டும்.

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் 38 இராஜாங்க அமைச்சுக்கள் அவசியமற்றவை. ஆகவே மக்களுக்கான நலன்புரி சேவைகளை மட்டப்படுத்த முன்னர் வீண் செலவுகளை அரசாங்கம் முதலில் குறைத்துக் கொள்ள வேண்டும்.
- என்றார்.

# யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலாவது கட்சியாக தேசிய மக்கள் சக்தி கட்டுப்பணம் செலுத்தியது!

தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நேற்று (வியாழக்கிழமை) செலுத்தியது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையிலான குழுவினரால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

வலி.வடக்கு பிரதேச சபை, வலிமேற்கு பிரதேச சபை, யாழ்.மாநகர சபை, சாவகச்சேரி நகரசபை, காரைநகர் பிரதேச சபை உள்ளிட்ட ஐந்து சபைகளுக்கு இதன்போது தேசிய மக்கள் சக்தியால் கட்டு பணம் செலுத்தப்பட்டது.

முதலாவது அரசியல் கட்சியாக தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் தனது கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

மேலும் சில சுயேச்சைக்குழுக்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் சில பிரதேச சபைகளுக்காக இதுவரை கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன.

# ஆஸு மாரசிங்கவின் கப்பம் கேட்டு மிரட்டல் முன்னாள் காதலி ஆதர்ஷாவுக்குப் பிணை

பேராசிரியர் ஆஸு மாரசிங்கவிடம் 10 கோடி ரூபா கப்பம்கோரி அச்சுறுத்துவதற்காக, ஆபாச வீடியோ ஒன்றை பொது வெளியில் வெளியிட்டார் எனக் கூறிய அவரின் முன்னாள் காதலியான ஆதர்ா கரடான என அறியப்படும் கரடான மமராலலாகே வகீா ஆதர்ா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் நேற்று (வியாழக்கிழமை) அவரை 5 லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

புதன்கிழமை மாலை அவரை சிஐடியின் கணினி குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

# சட்டவிரோதமாக மணல் கடத்தி கொண்டுசென்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சியில் ஒருவர் கைது!



அனுமதிப்பத்திரம் இன்றி சட்ட விரோதமாக மணல் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட் பட்ட வேம்படுகேணி பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சட்டவிரோதமாக மணல் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் டிப்பர் வாகனத்தை செலுத்திய சாரதி இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் வழக்கு தொடரப்படவுள்ளதாகப் பளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# அமெ. அரசின் இரகசிய ஆவணங்கள் பல அதிபர் ஜோ பைடன் வீட்டில் கண்டுபிடிப்பு!




வொஷிங்டன், ஜன.13

அமெரிக்காவின் அதிபர் ஜோ பைடன் வீடு மற்றும் அவரது தனி அலுவலகத்தில் இருந்து அமெரிக்க அரசின் இரகசிய ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் ஜோ பைடன் அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக இருந்த 2009 முதல் 2016 ஆண்டு வரையிலான ஆவணங்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு தொகுதியாக பத்து ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த நிலையில் இந்த ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்ட விவகாரம் அமெரிக்க அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அரசின் அதிமுக்கிய இரகசிய ஆவணங்கள் அதிபர் ஜோ பைடனின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட நிலையில் இது குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

அதிபர் வீட்டில் இருந்து அரசின் ரகசிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாக ராபர்ட் ஹூர் தலைமையில் விசாரணைக்கு அமைத்து அமெரிக்க அடர்னி ஜெனரல் மெரிக் ஹார்லெண்ட் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் அதிபராக இருந்த ட்ரம்பின் இல்லத்திலிருந்து அவர் பதவியை விட்டு விலகிய பின்னர் இதுபோன்றே 320 இரகசிய ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானில் குண்டுத் தாக்குதல்; ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்பு!



காபூல், ஜன.13

ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூல், வெளியுறவுத்துறை அலுவலகம் அருகே நேற்று முன்தினம் வெடிகுண்டு தாக்குதல் நடந்ததில் 5 பேர் பலியாகியிருந்தனர். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினர் பொறுப்பேற்று நேற்று அறிக்கை வெளியிட்டு உள்ளனர்.

அமைச்சகரகத்தில் இருந்து முக்கிய அதிகாரிகள் வெளியேறும் போது அலுவலக வாசலில், இருந்த தற்கொலைப் படை பயங்கரவாதி கெய்பர் அல் காந்தகாரி இந்த தாக்குதலை நடத்தினார் என அவர்கள் கூறி உள்ளனர். இதற்கு ஆளும் தாலீபான் அதிகாரிகள் உடனடியாக எந்த பதிலும் தெரிவிக்கவில்லை.

'காபூல் தாக்குதலில் பொதுமக்கள் 5 பேர் பலியானார்கள்' என்று மட்டும் தகவல் வெளியிட்டது. நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. எனவே 'பலி எண்ணிக்கை உயரக்கூடும்' என்று அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# லண்டனில் பெப்ரவரி முதலாம் திகதியில் ஒரு லட்சம் ஊழியர்கள் வேலை நிறுத்தம்!

லண்டன், ஜன.13

இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில், அங்குள்ள மிகப்பெரிய வர்த்தக அமைப்புகளில் ஒன்றான பொது மற்றும் வர்த்தக சேவை அமைப்பு வேலை நிறுத்த போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த அமைப்பில் அரசு ஊழியர்கள் மற்றும் பிற துறையை சார்ந்த ஊழியர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். 'ஒரு லட்சம் ஊழியர்கள் பிப்ரவரி முதலாம் திகதி போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்' என்று அந்த அமைப்பின் டுவிட்டர் பக்கத்தில் பதிவு வெளியிடப்பட்டுள்ளது.

முந்தைய பிரதமர் லிஸ் டிரஸ் காலத்தில் பொருளாதார நெருக்கடி மற்றும் தொழில்துறை நடவடிக்கைகளால் அடிக்கடி போராட்டங்கள் நடந்தன. அதனால் லிஸ் டிரஸ் பதவி விலகி, இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனக் பிரதமராக பொறுப்பேற்றார். அவர் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக வரி உயர்வு உள்ளிட்ட சில கடுமையான நடவடிக்கைகளை சமீபத்திய இடைக்கால பட்ஜெட்டில் அறிவித்துள்ளார். இந்த நிலையில் வேலை பாதுகாப்பு, வேலைநீக்க விதிமுறைகள், ஓய்வூதியம், சம்பளவிகிதம் உள்ளிட்டவற்றில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கும் கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. லட்சக்கணக்கானவர்கள் திரளும் மிகப்பெரிய மக்கள் போராட்டம் இதுவாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீண்ட தூர விமானப் பயணிகள் முகக்கவசம் அணிவது அவசியம்

## உலக சுகாதார அமைப்பு பரிந்துரை

*நியூயார்க், ஜன.13*

*அமெரிக்காவில் கடந்த 7ஆம் திகதி வரையிலான அறிக்கையின்படி, 27.6 சதவீதம் மக்கள் கொரோனாவின் எக்ஸ்.பி.பி.1.5 என்ற உருமாறிய அதிதீவிர பரவல் தன்மை கொண்ட ஒமைக்ரான் வைரஸால் பாதிக்கப்பட்டு உள்ளனர் என அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் அச்சம் தெரிவித்து உள்ளனர்.*

*அமெரிக்காவில் கொரோனாவின் இந்த ஒமைக்ரான் வைரசின் துணை வகை தொற்றானது சமீப நாள்களாக விரைவாக பரவி வருகிறது. எனினும், இந்த வகை வைரஸானது, சர்வதேச அளவில் தொற்றை ஏற்படுத்தி புதிய அலையை ஏற்படுத்த கூடிய சாத்திய கூறுகள் பற்றி தெளிவாக தெரியவில்லை.*

*இந்தச் சூழலில், கொரோனா பரவல் அதிகமுள்ள பகுதிகளில் இருந்து வர கூடிய எந்தவொரு பயணியும் முக கவசம் அணிந்து வரவேண்டும் என்று பரிந்துரைக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐரோப்பிய அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.*

*இதுபற்றி உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பிய நாடுகளுக்கான மூத்த அவசரகால அதிகாரி கேத்தரீன் ஸ்மால்வுட் கூறும்போது, விமானத்தில் புறப்படும் முன் நாடுகள் பரிசோதனை செய்து அனுப்ப வேண்டும். வேற்றுமையின்றி பயண கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நாடுகள் அமுல்படுத்த வேண்டும் என கூறியுள்ளார்.*

*அதனால், அமெரிக்காவில் இருந்துவரும் பயணிகளுக்கு பரிசோதனை செய்ய வேண்டும் என்று எங்கள் அமைப்பு பரிந்துரைக்க வரவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். எனினும், 27 அரசாங்கங்களை சேர்ந்த ஐரோப்பிய யூனியனின் அதிகாரிகள் அடங்கிய குழுவானது, சீனாவில் இருந்து புறப்பட்டு வரும், சென்று சேரும் விமான பயணிகள் கட்டாயம் முக கவசம் அணிய வேண்டும், சீனாவில் இருந்து வரும் பயணிகளிடம் பரவலான பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும் என கடந்த வாரம் பரிந்துரைத்து இருந்தது. ஏனெனில், சீனா கொரோனா பற்றிய தகவலை குறைத்து காட்டுகிறது என உலக சுகாதார அமைப்பு உள்ளிட்ட பல்வேறு நாட்டு விஞ்ஞானிகளும் நம்புகின்றனர்.*



*அமெரிக்காவில் பரவல் அதிகரித்துள்ள இந்த சூழலில், கொரோனா பரவல் அதிகமுள்ள பகுதிகளில் இருந்து வர கூடிய மற்றும் நீண்ட தூர விமான பயணம் மேற்கொள்ளும் எந்தவொரு பயணியும் முக கவசம் அணிந்து வரவேண்டும் என உலக சுகாதார அமைப்பு பரிந்துரை செய்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# தமிழக கவர்னர் ஏற்படுத்திய சர்ச்சை டில்லியில் ஆராய்வு



சென்னை,ஜன்.13

தமிழக சட்டசபையில் கவர்னர் ஆர்.என்.ரவி கடந்த 9 ஆம் திகதி உரை நிகழ்த்திய போது அரசு தயாரித்த சில பகுதிகளை வாசிக்காமல் தவிர்த்தார். மேலும் சில வரிகளைக் கூடுதலாகச் சேர்த்துப் படித்தார். இதனால் அவருக்கு எதிராக முதல்மைச்சர் மு.க.ஸ்டாலின் தீர் மானம் கொண்டு வந்தமை மட்டுமின்றி அச்சடிப்பட்ட உரையை அவை குறிப்பில் பதியவும் ஒருமனதாக முடிவு எடுக்கப்பட்டது. இதனால் கவர்னர் ஆர்.என்.ரவி சட்டசபையில் இருந்து பாதியிலேயே வெளியேறினார்.

இது அரசியல் வட்டாரத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த நிலையில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி மீது ஜனாதிபதி திரவுபதி முர்முவிடம் புகார் தெரிவிக்க தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு, தமிழக சட்ட அமைச்சர் ரகுபதி, வில்சன் எம்.பி., என்.ஆர்.இளங்கோ, ஆ.ராசா ஆகியோரை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் டெல்லிக்கு அனுப்பி வைத்தார். இந்த குழுவினர் நேற்று ஜனாதிபதி திரவுபதி முர்முவை சந்தித்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடுத்து அனுப்பிய 5 பக்க கடிதத்தை வழங்கினார்கள்.

அந்தக் கடிதத்தில் கடந்த 9ஆம் திகதி தமிழக சட்டசபையில் நடந்த நிகழ்வுகள் பற்றியும் கவர்னர் உரையில் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைவுரையில் இருந்த பல பகுதிகளை கவர்னர் படிக்காமல் விட்டமையையும், பல புதிய கருத்துக்களை இணைத்தும் உரையாற்றியமை பற்றி விளக்கப்பட்டிருந்தது. இது தமிழக சட்டமன்ற வரலாற்றின் மரபுகளை மீறிய செயல் என்பதால் அவர் வாசிக்காத பகுதிகளை அவைக் குறிப்பில் பதிவு செய்யும் விதமாக ஒரு திருத்த தீர்மானத்தை கொண்டு வந்து சட்டமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலோடு நிறைவேற்றப்பட்டது என்ற விவரமும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அது மட்டுமின்றி கவர்னர் ஆர்.என்.ரவி பொது வெளியில் சர்ச்சைக்குரிய வகையில் பேசிவருகின்றமையால் நமது மரபுகளை மீறாமல் தமிழ்நாடு மற்றும் மாநில மக்களுக்கேற்ப பணியாற்ற அறிவுறுத்த வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது. இந்த கடிதம் மாநிலத்தில் ஒரு இணக்கமான சுமுகமான உறவு நீடிக்க வேண்டும் என்பதற்காகவே எழுதப்படுகிறது என்று கூறப்பட்டிருந்தது.

தி.மு.க. கொடுத்த புகார் கடிதத்தை ஜனாதிபதி உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பி வைத்துள்ளார் எனத் தெரிகிறது. அவர்கள் இது தொடர்பாக சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு கருத்து கேட்டனர்.

இந்த சூழலில் கவர்னர் ஆர்.என்.ரவி இன்று காலை 11.20 மணிக்கு திடீரென டெல்லி புறப்பட்டுச் சென்றார். தமிழக சட்டசபையில் உரை நிகழ்த்திய போது ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை பற்றியும், என்ன காரணத்தால் அரசின் உரையை முழுமையாக படிக்காமல் சில பகுதிகளைத் தவிர்த்தார் என்பது பற்றியும் எடுத்து சொல்வதற்காக அவர் பிரதமர் மோடி, உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்தித்து பேச உள்ளார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இது தவிர மேலும் சில முக்கிய பிரமுகர்களை அவர் சந்தித்துப் பேசுவார் என்றும் தெரிகிறது. கவர்னர் யார் யாரையெல்லாம் சந்திக்க உள்ளார் என்ற விவரம் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை. டெல்லி சென்றுள்ள கவர்னர் ஆர்.என்.ரவி நாளை இரவு 8.15 மணிக்கு விஸ்தாரா ஏர்லைன்ஸ் விமானத்தில் சென்னை திரும்புவார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

# சொகுசு பஸ் - லொறி மோதி விபத்து 7 பெண்கள் உட்பட 10 பேர் மரணம்!

## மராட்டிய மாநிலத்தில் சம்பவம்




நாசிக்,ஜன.13

மராட்டிய மாநிலம் சின்னார் ஷீரடி நெடுஞ்சாலையில் லொறி மீது சொகுசு பஸ் மோதி ஏற்பட்ட விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

தானே மாவட்டத்தில் உள்ள அம்பர்நாத்தில் இருந்து 50 பயணிகளுடன் புறப்பட்ட சொகுசு பஸ் ஒன்று ஷீரடி நோக்கி சென்று கொண்டிருந்தது. இந்த நிலையில் நாசிக்கின் பத்தரே கிராமத்திற்கு அருகே வந்து கொண்டிருந்த போது அது லொறி மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 7 பெண்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

மேலும் பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு சின்னாரில் உள்ள கிராம மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைக்கு மாற றப்பட்டுள்ளனர். விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு முதல் மந்திரி ஏக்நாத் ஷிண்டே ரூ. 5 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் விபத்து குறித்து விசாரணை நடத்தவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# சுவாமி விவேகானந்தரின் மறுபிறவிதான் மோடியாம்

## பா.ஜ.கட்சி எம்.பி. கூறுகின்றார்



கொல்கத்தா,ஜன.13

சுவாமி விவேகானந்தரின் மறுபிறவியே பிரதமர் மோடி என்று பா.ஜ.கட்சி எம்.பி. கூறினார்.

சுவாமி விவேகானந்தரின் 160 ஆவது பிறந்ததினம் நேற்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. மேற்கு வங்காளத்தில் சுவாமி விவேகானந்தரின் பிறந்ததினத்தையொட்டி நேற்று நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியில் பா.ஜ.கட்சி எம்.பி. சவுமித்ரகான் பங்கேற்றார். நிகழ்ச்சிக்கு பின் செய்தியாளர்களை சந்தித்த சவுமித்ரகான் கூறுகையில், சுவாமி விவேகானந்தர் புதியவடிவில் பிரதமர் மோடியாக மறுபிறவி எடுத்துள்ளார். சுவாமி விவேகானந்தர் கடவுளுக்கு நிகரானவர். தனது தாயாரை இழந்தபோதும் பிரதமர் மோடி இந்த நாட்டுகாக தன்னை அர்ப்பணித்துக்கொண்டதை பார்க்கும்போது 'நவீன இந்தியாவின் புதிய சுவாமி விவேகானந்தராக பிரதமர் மோடி' என எனக்கு தோன்றுகிறது' என்றார்.

# சரத் யாதவ் காலமானார் ராகுல் நேரில் அஞ்சலி



புதுடெல்லி,ஜன.13

மத்திய முன்னாள் மந்திரி சரத் யாதவின் உடலுக்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எம்.பி. நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

மத்திய முன்னாள் மந்திரி ஐக்கிய ஜனதா தளக் கட்சியின் முன்னாள் தலைவருமான சரத் யாதவ் (வயது 75) உடல்நலக்குறைவு காரணமாக குருகிராமில் உள்ள தனியார் மருத்துவமனையில் வியாழக்கிழமை இரவு காலமானார்.

சரத் யாதவ் மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி, மத்திய மந்திரிகள், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, டெல்லியில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள சரத் யாதவின் உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். மேலும் அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதல் தெரிவித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, 'ரத் யாதவ் ஜியிடம் இருந்து அரசியல் பற்றி நிறைய கற்றுக்கொண்டேன். இன்று அவரது மறைவு என்னை வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது. அவர் எனது தந்தையுடன் மரியாதைக்குரிய நட்புறவைக் கொண்டிருந்தார்' என்றார்.





# போதை ஒழிப்பு விழிப்புணர்வுக்கு பொத்துவிலில் சைக்கிளோட்டம்

(அபு அலா)

பொத்துவில் றோயல் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் 'போதையை ஒழிப் போம் – மாணவர்களை காப்போம்' எனும் தொனிப்பொருளில் திருகோணமலை முதல் பொத்துவில் அருகம்பை வரையிலான தனி நபர் சைக்கிளோட்டம் நேற்று முன்தினம் காலை 6.30 மணி யளவில் கிழக்கு மாகாண சபை முன்றிலில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சைக்கிள் ஓட்டம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே. முரளிதரனினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப் பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## உறணியில் பஸ் விபத்து மூன்று பயணிகள் காயம்



மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதி ஊறணி பிரதேசத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வேகக்கட்டுப்பாட்டை மீறீ வீதியை விட்டு விலகி, பனை மரத்துன் மோதிய விபத்தில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்பு நகரை நோக்கி பிரயாணத்தை மேற்கொண்ட பஸ் அதிகாலை 5.30 மணிக்கு மட்டு ஊறணி சந்திக்கு அருகில் வேவகக் கட்டுப்பாட்டை மீறி வீதி யில் இருந்த பனைமரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது

இதில் பயணித்த 3 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன் இது தொடர்பான மேல திக விசாரணைகளை மட்டு தலைமையக போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நீதிமன்றில் இருந்த கைதிக்கு பீடி கொடுத்தவருக்குச் சிறை!

(காரைதீவு சகா)


அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவருக்கு பீடி கொடுத்த குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு 03 மாத கால கடூழிய சிறைத்தண்டனையும், ஆயிரத்தி 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்த உத்தரவை அக்கரைப்பற்று நீதிவான் எம்.எச்.எம். ஹம்ஸா நேற்று வியாழக்கிழமை வழங்கினார்.

குற்றச்சாட்டின் பேரில் அக்கரைப்பற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற சிறைக்கூடத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபருக்கு நேற்று வியாழக்கிழமை புகைத்தலுக்காக பீடி வழங்கிய போது பொலிஸாரால் இந்நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அந்நபரை அக்கரைப்பற்று நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்த போது 03 மாத கால கடூழிய சிறைத்தண்டனையும், ஆயிரத்து ஐந்நூறு ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

## திருமலையில் கெப் வாகனம் விபத்தில்!



(இரா.ரஜீந்திரமூர்த்தி)

திருகோணமலை நகரசபைக்கு சொந்தமான கெப் ரக வாகனம் திரு கோணமலை தபாலக வீதி யில் நேற்று மாலை மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் சாரதியும் சக ஊழியர் ஒருவரும் காயமடைந்து ம ருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலி ஸார் மேற்கொண்டுவரு கின்றனர்.

# அழகுக்கலைப் பயிற்சிகளை பெற்றவர்களுக்குச் சான்றிதழ்









(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலகத் தில் அழகு கலைப்பயிற்சி நெறியினை நிறைவு செய்த யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில்இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் க.சதிசேகரன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா, சமூக செயற்பாட்டாளர் வி.வாமதேவன், தென்கிழக்கு பல்கலைக்கழக விரி வுரையாளரும் சமூக செயற்பாட் டாளருமான செல்வி.அனுசியா சேனா திராஜா, பிரதேச செயலக இளைஞர் சேவை உத்தியோகத்தர் வை.பிர பாகரன், அழகுக் கலை ஆசிரியர் தி ருமதி சுபாஜினி பிரபாகரன் மற்றும் பயிற்சி பெற்றவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கை செஞ்சிலுவை சங்கத்தால் 500 குடும்பங்களிற்கு அவசர உதவி!






இலங்கை செஞ்சிலுவை சங்கத்தால் 500 குடும்பங்களிற்கு அவசர உதவி வழங்கும் நிகழ்வு ஆரம்பமானது. அதன் முதல் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) கரைச்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. கரைச்சி பிரதேசசெயலாளர்பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 150 குடும்பங்களிற்கு18ஆயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர்கள்வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) காலை 10 மணியளவில் கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது வவுச்சர்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறி மோகனன், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கிளிநொச்சி கிளை தலைவர் சேதுபதி, செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள்உள்ளிட்டபலர்கலந்துகொண்டனர். இதன்போது வழங்கப்பட்ட வவுச்சர்கள் மூலம், மருந்துப் பொருள்கள், உணவுப் பொருள்களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும், சர்வதேச செஞ்சிலுவைசங்கங்கள்ஊடாக கர்ப்பிணிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் நலிந்த குடும்பங்களுக்கானஉதவிகள்இவ்வாண்டு கிடைக்க உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழ் கட்சிகளின் ஒன்றிணைவை வலியுறுத்திய தனிநபரின் உண்ணாவிரத போராட்டம் நிறைவு!




தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் அனைத்து கட்சிகளையும், அமைப்புகளையும், தனிநபர்களையும் ஓரணியில் திரள வலியுறுத்தி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் முன்னாள் போராளியொருவரால் கடந்த நான்கு நாள்களாக இடம்பெற்றுவந்த சாகும்வரை உண்ணாவிரத போராட்டம் அரசியல் கட்சி தலைவர்களின் எழுத்துமூல உறுதி மொழியை அடுத்து நேற்று (வியாழக்கிழமை) கைவிடப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பதாம் திகதி காலை முதல் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்றுவந்த நிலையில் நேற்று (வியாழக்கிழமை) நூற்றுக்கணக்கான மக்கள் போராட்டம் இடம்பெறும் இடத்தில ஒன்றுகூடியிருந்ததோடு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சிலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர். புதுக்குடியிருப்பு சந்தியில், இலங்கை வங்கி கட்டடத்துக்கு அண்மையில் மேற்படி உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னாள் போராளியும் மாவீ ரர்களின் சகோதரனும் நாட்டுப்பற்றாளர் ஒருவரின் மகனுமான வேலுப்பிள்ளை மாதவமேஜர் நீரா காரம் எதுவுமின்றி சாகும்வரையான உண்ணாவிர த போராட்டத்தை ஆரம்பித்து முன்னெடுத்து வந்தார்.

தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் அனைத்து கட்சிகளும் தமக்கிடையிலான ஆசன பங்கீட்டு பிரச்சினைகளைக் கைவிட்டு, தமிழ் மக்களின்அரசியல்அபிலாஷை-யை வென்றெடுப்ப தற்காக ஓரணி யில் திரள வேண்டும் எனவலியுறுத்தி இந்தப்போராட்டத்தை இவர் ஆரம்பித்து முன்னெடுத்துவந்தார்.

இந்த நிலையில் நேற்று (வியாழக்கிழமை) உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகைதந்த தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நாடாளுமனற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், மற்றும் ரெலோ கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ,ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் மற்றும் புளொட் அமைப்பின் உறுப்பினரும் முன்னாள் மாகாண சபை அமைச்சருமான கந்தையா சிவநேசன் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியை சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் ஆகியோர் எழுத்துமூல ஆவணத்தில் தாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டாக செற்படுவோம் மேற்படி உண்ணாவிரதம் இருக்கும் நபரின் கோரிக்கையை வலுப்படுத்த ஒன்றிணைவோம் என்ற உறுதிமொழியை வழங்கி கையொப்பமிட்ட பின்னர் உண்ணாவிரதம் மேற் கொண்ட நபருக்கு நீராகாரம் வழங்கி உண்ணா விரதம் முடித்து வைக்கப்பட்டி ருந்தது. இந்த உண்ணாவிரத போராட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆதரவு தெரிவித்து கலந்து கொண் டிருந்த போதிலும் மேற் படி ஆவணத்தில் அவர் கையொப்பமிடவில்லை. அத்தோடு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளு மனற உறுப்பினர் சிவ ஞானம் சிறிதரனும் இந்தப் போராட்டத்துக்கு ஆத ரவை வெளிப்படுத்தி கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுவாமி விவேகானந்தரின் 160 ஆவது ஜனன தினம் வவுனியாவில் நடந்தது!

வவுனியா ரயில் நிலைய வீதிலுள்ள சுவாமி விவேகானந்தரின் நினைவுத் தூபியில் நேற்று (வியாழக்கிழமை) காலை 9 மணியளவில் அன்னாரின் 160 ஆவது ஜனன தின நிகழ்வுகள் இடம் பெற்றன.

சிலையைப் பராமரிக்கும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் அனுசரணையில் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபையின் உப தபிசாளர் சு.குமாரசாமி தலைமையில் இடம்பெற்ற நினைவு தின நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை தமிழ் மணி அகளங்கன் நிகழ்த்தினார். இதையடுத்து மலர் மாலை அணிவித்து, மலர் தூவி நினைவு தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் ப.சத்தியநாதன் மற்றும் உறுப்பினர்கள், நகரசபை உறுப்பினர்களான பிரதாப், சுமந்திரன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரவீந்திரன், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி தொழிற்சங்க கலந்துரையாடல்!



சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க கலந்துரையாடல் நேற்று (வியாழக்கிழமை) கிளிநொச்சியில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடல் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது. தொழிற்சங்கத்தின் தலைவர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்குமார கலந்து கொண்டார்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்தியது தமிழரசுக்கட்சி!

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை இலங்கைத் தமிழரசுக்கட்சி நேற்று (வியாழக்கிழமை) மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் செலுத்தியுள்ளது.

இலங்கைத் தமிழரசுக்கட்சி முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக மாவட்டத்தின் நான்கு பிரதேச சபைகளுக்குமான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் மற்றும் செயலாளர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கமலேஷ்வரன் ஆகியோர் இணைந்து எதிர் வரும் உள்ளாட்சித் தேர்தலில் பங்கு கொள்ளுவதற்கான கட்டுப்பணமாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் ரூபா ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 500 ரூபாவைச் செலுத்தி உள்ளார்கள்.

## நூலக நிறுவனத்தினால் நிகழ்த்தப்படும் 63 ஆவது இணையவழி நிகழ்ச்சி தொடர்

*நூலக நிறுவனத்தால் நிகழ்த்தப்படும் இணையவழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 63 ஆவது நிகழ்வாக 'வடபுல தமிழ்ச் சூழலில் குயர் மக்கள்' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை (சனிக்கிழமை) இரவு 7.30 மணிக்கு இடம்பெறும்.*

*இந்தக் கலந்துரையாடலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடகக் கற்கைகள் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றும் அனுதர்ஷி கபிலன் உரை நிகழ்த்தவுள்ளார். ஒருங்கிணைப்பாளராக சுஜீவன் தர்மரத்தினம் செயற்படுவார். நூலக நிறுவனம் அனைவரையும் கலந்துரையாடலில் பங்குபற்றி பயனுறுமாறு அன்புடன் அழைக்கின்றது.*

## இரு முஸ்லிம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் இருவரும் காணாமல் போயுள்ளனர் என்று பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்தன.

இதன்படி, கேகாலை வலய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறித்த இளைஞர்களைத் தேடி விசாரணைகளை ஆரம்பித்தனர்.

குறித்த இளைஞர்கள் ரம்புக்கனை, ஹூரிமலுவ பிரதேசத்தில் உள்ள போதைப்பொருள் வர்த்தகர் ஒருவரிடம் போதைப்பொருள் பெறச் சென்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்தது.

அங்கு ஏற்பட்ட மோதலின் பின்னர் போதைப்பொருள் வர்த்தகரால் இந்த இரண்டு இளைஞர்களும் கொல்லப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

ரம்புக்கனை, ஹூரிமலுவ பிரதேசத்தில் போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரின் வீட்டில் கொலை செய்யப்பட்டனர் எனக் கருதப்படும் குறித்த இளைஞர்கள், கோழிக் கூடொன்றுக்குஅருகில்புதைக்கப்பட்டு, அதற்கு மேல் கொங்கிறீட் போடப்பட்டிருந்தது. அதற்கமைய குறித்த வீட்டின் சந்தேகத்துக்கிடமான அந்தப் பகுதியில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கேகாலை பொது வைத்தியசாலையின் நீதிவான் மற்றும் சட்ட வைத்திய நிபுணர்ஆகியோரின்மேற்பார்வையில் இந்த அகழ்வுப் பணிகள் நேற்று மாலை ஆரம்பிக்கப்பட்டன.

இந்த அகழ்வு நடவடிக்கைகளின் போது, கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவரின் சடலம் (உடற்பாகங்கள்) நேற்று மீட்கப்பட்டதுடன் மற்றைய இளைஞரின் உடல் பாகங்களும் இன்று கண்டெடுக்கப்பட்டன.

## திட்டமிட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டபிள்யூ.எம்.ஆர்.விஜேசுந்தரவால் தாக்கல் செய்யப்பட்ட மனு உயர்நீதிமன்றத்தில் இன்று, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான எஸ்.துரைராஜா மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே உள்ளூராட்சி சபைத் தேர்தல் திட்டமிட்டு நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

மனு மீதான விசாரணை எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறும்.

## பொங்கல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படும் என்றும், இரவில் 1 மணி நேரம் 20 நிமிடம் மின்சாரம் துண்டிக்கப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரயிலுடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் இன்று அதிகாலை விபத்தின் பின்னர் தடம் புரண்டது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஹடரெஸ் கொடுவ பிரதேசத்துக்கு அருகில் அதிகாலை 5.05 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து ரயிலின் இயந்திரம் மற்றும் மற்றொரு பெட்டி தடம் புரண்டுள்ளன.

இதன் காரணமாக மட்டக்களப்பு – கொழும்பு ரயில் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

## புதிய கூட்டணி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை ஆரம்பித்த சந்திப்பின் பின்னர் கூட்டணி தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

சின்னம் தொடர்பில் இழுபறி காரணமாக விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் மணிவண்ணன் அணியினர் இடை நடுவில் இன்றைய கூட்டத்திலிருந்து வெளியேறினர்.

இந்நிலையில் மீதமிருந்த ஏனைய கட்சிகள் உடன்பாட்டுக்கு வந்து கூட்டாக கூட்டணி அமைக்க முடிவு எடுத்தது

தமிழரசி கட்சி தனியாக போட்டியிட முடிவெடுத்த பின்னர் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளை இணைத்து குறித்த கூட்டணி உருவாக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

வடகிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் குறித்த கூட்டணி அமைக்கப்பட்டு போட்டியிடவுள்ளது. இது தொடர்பாக ஆராய்ந்து நாளை காலை புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என்றார் அவர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.01.2023 இல் வெளியிடப்பெற்றது.